**நாள் - 07.10.2025**
**OS 44/2024**
(Old Os No.131/2019)
PW2 – பரமேஸ்வரி க/பெ ஏழுமலை
வயது - 41

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

இந்த வழக்கின் வாதி எனது அம்மா என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எங்கள் ஊரான ஆனானந்தலை சேர்ந்தவர் என்றால் சரிதான் அவரை எனக்கு 15 ஆண்டுகளாக தெரியும். எந்த தேதியில் எனது தகப்பனார் இறந்தார் என்று தெரியுமா என்றால் 26.01.2007 அன்று இறந்தார். மேற்படி எனது தகப்பனார் உடம்பு சரியில்லாத போது எனது அம்மா சிகிச்சைக்காக நிறைய நபர்களிடம் கடன் வாங்கினார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனது அம்மா சொல்லிதான் எனக்கு தெரியும் எனக்கு நேரடியாக தெரியாது. மேற்படி நிறைய பேர்களிடம் பெற்ற கடன்களை அடைப்பதற்காக எனது அம்மா 1ம் பிரதிவாதியான இளையபெருமாளிடம் கடன் வாங்கினார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது எனது அம்மா சொல்லிதான் தெரியும். மேற்படி கடனுக்காக 1ம் பிரதிவாதி தாவா சொத்தினை பொறுப்புக்காக எனது அம்மாவிடம் இருந்து எழுதி வாங்கினார் என்றும் பின்னர் கடனை திருப்பி செலுத்திய பின்னர் சொத்தினை திரும்ப எழுதி ஒப்படைத்துவிடுவதாகவும் சொன்ன விஷயங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனது அம்மா சொல்லிதான் தெரியும். மேற்படி ரூ.15 ஆயிரம் கடனுக்காக ரூ.100ற்கு ரூ.5 வட்டி என்று நிர்ணயம் செய்யப்பட்டதும் எனது அம்மா சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 06.06.2016ம் தேதி மேற்படி 1ம் பிரதிவாதிக்கு இந்த வழக்கு சொத்தினை கிரயம் செய்து கொடுத்தபோது எனது தாயாருடன் பதிவு அலுவலகத்திற்கோ அல்லது மேற்படி கிரய பத்திரத்தை தயார் செய்யும் போதும் நான் உடனில்லை என்றால் சரிதான். 2019ம் வருடம் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் என் அம்மா பெற்ற கடனை அசல் மற்றும் வட்டியுடன் சேர்த்து 1ம் பிரதிவாதியிடம் திரும்ப செலுத்த சென்ற போது அவர் அதை பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார் என்பதையும் சொத்தினை எனது அம்மாவிற்கு கிரயம் செய்து கொடுக்க மறுத்துவிட்டார் என்பதையும் எனது அம்மா சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என் அம்மாவை 1ம் பிரதிவாதி அடித்து துரத்தவிட்டார் என்ற விபரம் என் அம்மா சொல்லிதான் தெரியும் நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். என் அம்மா மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுக்க சென்ற போது நானும் உடன்

சென்றேன் என்றால் சரிதான். 24.03.2019 அன்று 1ம் பிரதிவாதி ஜேசிபி மற்றும் அடியாட்களுடன் வந்து தாவா சொத்தில் என் அம்மா பயிருட்டு இருந்த உளுந்து பயிரை அழித்து விட்டார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் என் அம்மா அலைபேசியின் மூலம் சொல்லிதான் எனக்கு தெரியும்.

23.11.2015ல் திருவண்ணாமலை இராமலிங்கனார் தெருவில் இருக்கும் என் வீட்டை நானும் என் கணவரும் சேர்ந்து 1ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்வதற்காக கிரய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தி இருந்தோம் என்றால் ஒப்பந்தம் செய்யப்பட்டது உண்மை தான் ஆனால் ரூ.20 இலட்சத்திற்கு மேற்படி எனது வீட்டை 1ம் பிரதிவாதியிடம் அடமானம் வைத்தோம் அதற்கு வட்டி ஏறி ரூ.40 இலட்சம் ஆகிவிட்டது அதனால் மேற்படி ரூ.40 லட்சத்திற்கே மேற்படி வீட்டை கிரயம் செய்து கொடுத்தோம், வீட்டில் இருந்த அனைத்து பொடுட்களையும் அவரே உடமையில் எடுத்துக்கொண்டார். 23.11.2015ம் தேதியிட்ட கிரய ஒப்பந்த பத்திரத்தில் மொத்தம் ரூ.75 லட்சத்திற்கு கிரயம் பேசி அதில் ரூ.70 லட்சம் பெற்றுக்கொண்டு மீதம் ரூ.5 லட்சத்தை கிரயத்தின் போது தருவார் என்று மேற்படி கிரய ஒப்பந்த பத்திரத்தில் வாசகம் உள்ளது என்றால் ரூ.20 லட்சதிற்கு தான் அடமானம் போட்டு ரூ.40 லட்சத்திற்கு தான் கிரயம் செய்து கொடுக்கப்பட்டது. 28.07.2017ம் தேதி மேற்படி 23.11.2015 கிரய ஒப்பந்த பத்திரத்தின் படி மீதி தொகை ரூ.5 லட்சத்தை பெற்றுக்கொண்டும் ஆக மொத்தம் ரூ.75 லட்சத்தை பெற்றுக்கொண்டு மேற்படி வீட்டினை நானும் எனது கணவரும் 1ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்தோம் என்றால் மேற்படி ரூ.75 லட்சம் தொகையை வாங்கவில்லை மொத்தம் ரூ.20 லட்சம் பெற்ற பணம் அதற்கு வட்டி ரூ.20 லட்சம் ஆக மொத்தம் ரூ.40 லட்சத்திற்கு தான் கிரயம் செய்து கொடுத்தோம். மேற்படி வீட்டினை மோசடி செய்து குறைந்த பிரதிபிரியோஜனத்திற்கு 1ம் பிரதிவாதி என் வீட்டினை வாங்கிவிட்டார் என்று நீதிமன்றத்திலோ அல்லது வேறு ஏதும் சட்டப்படி நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. எனது கணவர் நிறைய நபர்களிடம் பணத்தை பெற்றுக்கொண்டு தலைமறைவு ஆகிவிட்டார் என்றால் சரிதான். மேற்படி எனது கணவரின் மீது நிறைய நபர்கள் கணவரிடம் கொடுத்த கடனை வசூலிக்க திருவண்ணாமலை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும் ஆனால் நான் எந்த கடனும் யாரிடமும் பெறவில்லை. 23.11.2015ம் தேதியிட்ட கிரய ஒப்பந்த பத்திரத்தில் உள்ள கையெழுத்துக்கள் எனது மற்றும் எனது கணவரின் கையெழுத்து தான் அந்த ஒப்பந்த பத்திரத்தை நாங்கள் தான் ஏற்படுத்தினோம் என்றால் சரிதான். அது **பிசாஆ1** ஆகும். மேற்படி 28.07.2017ம் தேதி கிரய பத்திரம் 1ம்

பிரதிவாதிக்கு எழுதி கொடுத்தோம் அதில் உள்ள கையெழுத்து எனது மற்றும் என் கணவருடையது தான் என்றால் சரிதான். அது **பிசாஆ2** ஆகும். நாங்கள் எவ்வாறு 1ம் பிரதிவாதிக்கு முறையாக கிரயம் கொடுத்தோமா அவ்வாறே எனது தாயாரும் தாவா ஷெட்யூல் சொத்தை 1ம் பிரதிவாதிக்கு முறையாக எழுதி பதிவு செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல.

எனது குடும்பத்திற்கும் 1ம் பிரதிவாதிக்கும் நல்ல உறவு சுமூகமான உறவு முறையும், சூழ்நிலையும் இருந்தது என்றால் 1ம் பிரதிவாதி வட்டி தொழில் செய்பவர் மற்றபடி அவருக்கும் எங்களுக்கும சம்மந்தம் இல்லை. இவ்வழக்கின் வாதியான எனது அம்மா மேற்படி தாவா சொத்தை கிரயம் செய்தது சம்மந்தமாக மேற்படி பரிவர்த்தணைகள் கடன் கொடுத்தது, வாங்கியது மற்றும் கிரயம் செய்தது போன்ற எந்தவொரு சங்கதிகளும் எனக்கு தெரியாது. எனது அம்மா என்பதால் அனைத்து சங்கதிகளும் எனக்கு தெரிந்தது போல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும எனது கணவரும் 1ம் பிரதிவாதியிடம் 2015ம் வருடம் நாங்கள் கிரயம் கொடுக்க முன் வந்ததால் தான் என் தாயாரும் 2016ம் வருடம் 1ம் பிரதிவாதிக்கு எனது தாயார் வழக்கு சொத்தை கிரயம் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் 1ம் பிரதிவாதி எங்களை ஏமாற்றி 2015ம் ஆண்டு வீட்டினை கிரயம் ஒப்பந்த போட்டிருந்தால் 2016ம் வருடம் எனது தாயார் தாவா சொத்தை கிரயம் கொடுக்க முன் வந்து இருக்க மாட்டார் என்றால் மேற்படி நாங்கள் 1ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்த விபரம் எனது தாயாருக்கு தெரியாது. அதேபோன்று 2016ம் ஆண்டு எனது அம்மாவை ஏமாற்றி 1ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரயம் பெற்றிருந்தால் நாங்கள் 2017ம் ஆண்டு எங்களுக்கு சொந்தமான வீட்டினை 1ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்து இருக்க மாட்டோம் என்றால் மிரட்டி தான் எங்களிடம் எங்கள் வீட்டை வாங்கினார்.

**<u>2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

இவ்வழக்கில் வட்டாச்சியர் , சார்பதிவாளர், மாவட்ட ஆட்சியர் ஆகியோரையும் சேர்த்து இவ்வழக்கில் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக என்ன நிவாரணம் இவ்வழ்க்கில் கேட்டுள்ளேன் என்றால் 1ம் பிரதிவாதிக்கு பட்டா மாற்றக் கூடாது என்றும், சொத்து குறித்து ஏற்படுத்தப்பட்ட கிரய பத்திரத்தை ரத்து செய்ய வேண்டும் என்றும் எனது அம்மா கோரியுள்ளார். மேற்பட நிருபண ஆணையுறுதியில் உள்ள சங்கதிகள் அனைத்து வாதி சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது தாயார் ரத்து செய்ய சொல்லி கேட்டுள்ள கிரய பத்திரத்தின் ஆவண எண் தெரியுமா

**என்றால் தெரியாது ஆனால் 2016ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பத்திரம் ஆகும். 1ம் பிரதிவாதியிடம் ரூ.60 ஆயிரத்தை பெற்றுக்கொண்டு தான் இந்த வாதி மேற்படி கிரய பத்திரத்தை பதிவு செய்தார் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் என்பது முறைப்படி ஆவணங்களை பார்வையிட்டு தான் முறையாக பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்